பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20 08 2026 THURSDAY 12 40 PM ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தென்மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாடு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில், கோவளத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

2. வந்தேமாதரம் பாடல் முழுமையாக பாடப்படமாட்டாது என்ற காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு, அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில், 6 பேர் உயிரிழந்தனர், 33 பேர் காயமடைந்தனர்.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tanu Sharma வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>>>><<<<<**

தென்மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள் பங்கேற்றுள்ள மாநாடு, சென்னையை அடுத்த கோவளத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

கூட்டாட்சி தத்துவத்திற்கு வலுசேர்க்கும் வகையில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சிதம்பரநாதன் 52 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<**

சிங்கப்பூர் உடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையிலான குழுவினர், அந்நாட்டு பிரதமர் திரு. Lawrence Wong-கை இன்று சந்தித்து பேச்சு நடத்தினர்.

சிங்கப்பூரில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, பொருளாதார ஒத்துழைப்பு, திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய அமைச்சர்கள் திரு. பியூஷ் கோயல், திரு. ஜெய்சங்கர், மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

**>>>>>><<<<<**

இந்தியா - ஜப்பான் இடையே பாதுகாப்பு அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் இன்று புதுதில்லியில் தொடங்கியது.

பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Shinjiro Koizumi தலைமையிலான குழுவினர் இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>><<<<<**

வந்தேமாதரம் பாடல் முழுமையாக பாடப்படமாட்டாது என்ற காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு, அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அரசியல் சாசனத்திற்கும், நாடாளுமன்ற ஜனநாயக நெறிமுறைகளுக்கும் மேலானதா காங்கிரஸ் என்றும் வினவியுள்ளார்.

நாட்டின் கலாச்சாரம் மற்றும் ஜனநாயகத்திற்கு எதிராக காங்கிரஸ் செயல்படுவதாகவும், வந்தேமாதரம் பாடலை அவமதிப்பது நாட்டை அவமதிப்பதாகும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் செளஹான் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு, தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு சிந்தனைக்கு வலுசேர்க்கும் வகையில் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இதன்காரணமாக, காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்உற்பத்தி அதிகரித்து வருவதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

தேசிய மருத்துவ ஆணையத்தின் சார்பில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு தனித்துவ அடையாள எண் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் புதிதாக உரிமமோ, பதிவோ இல்லாமல் சேவையாற்ற முடியும் என்று தேசிய மருத்துவ ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<

ஐ.நா பாதுகாப்பு குழுவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா பாதுகாப்பு குழுவில் நடைபெற்ற விவாதத்தின் போது இந்தியா சார்பில் பேசிய திருமதி. Yojna Patel இதனை வலியுறுத்தினார்.

தற்போதைய சூழலுக்கு ஏற்ப, சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஐ.நா பாதுகாப்பு குழு கூடுதல் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும் என்றும் திருமதி. Yojna Patel கூறினார்.

**>>>>>><<<<<**

விடுதலைப்போராட்ட வீரர் ஒண்டிவீரனின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், முதலமைச்சர் திரு. விஜய் உள்ளிட்ட தலைவர்கள் பலர் அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

**>>>>>><<<<<**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் பலர் அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

**>>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆகியோர் அளித்த உத்வேகம் மற்றும் ஆதரவு காரணமாக, நக்ஸலைட்டு பிரச்சினை இல்லாத மாநிலமாக சத்திஷ்கட் உருவாக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. Vishnu Dev Sai கூறியுள்ளார்.

சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில், அம்மாநிலத்தில் களப்பயணம் மேற்கொண்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நக்ஸலைட்டு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும், சுற்றுலா தொடர்பான முன்னெடுப்புகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது அவர் எடுத்துரைத்தார்.

சரணடைந்த நக்ஸலைட்டுகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு. Vishnu Dev Sai கூறினார்.

>>>>>><<<<<

ஒடிசாவில் இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 21ஆம் தேதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பான மேல்முறையீடுகள் குறித்த முடிவுகள் அடுத்த மாதம் 11ஆம் தேதிக்குள் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

>>>>>><<<<<

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில், 6 பேர் உயிரிழந்தனர், 33 பேர் காயமடைந்தனர்.

Kyiv நகரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா நடத்திய இந்த ஏவுகணை தாக்குதல் காரணமாக, யுக்ரைனின் பல்வேறு பகுதிகள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

>>>>>><<<<<

ஆப்கானிஸ்தானின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இந்தியா தொடர்ந்து உதவிகளை வழங்கி வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக அந்நாட்டிற்கு மருந்துப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

காபூலில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பயன்படுத்துவதற்காக இந்த மருந்துப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<**

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tanu Sharma வெள்ளிப்பதக்கம் வென்றார்.

Slovakia-வின் Bratislava-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 72 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் 62 கிலோ எடைப்பிரிவில் Savita Dalal-ம், 76 கிலோ எடைப்பிரிவில் Kajal-ம் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>><<<<<**

ஆசியான் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

சிங்கப்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் 11 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

**>>>>>><<<<<**

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-16, 21-12 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Rin Iwanaga - Kie Nakanishi இணையை வென்றது.

>>>>>><<<<<

உலக கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா-இங்கிலாந்து இடையேயான ஆட்டம் நெதர்லாந்தின் Amstelveen-ல் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<

சிங்கப்பூர் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-6, 21-6 என்ற செட்கணக்கில் சுவிட்சர்லாந்தின் Anastacia Fischer-ஐ வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவுகளில் Llishaa Pal மற்றும் Priyanshu Rajawat-ம், கலப்பு இரட்டையர் பிரிவில் Mohit Jaglan – Lakshita Jaglan இணையும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>>><<<<<

Cancun சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஸ்ரீராம் பாலாஜி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை 3-6, 6-4, 10-4 என்ற செட்கணக்கில் கொரியாவின் Jisung Nam - பின்லாந்தின் Patrik Niklas Salmilen இணையை வென்றது.

>>>>>><<<<<

Quebec சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Nikki Kaliyanda Poonacha - ஈக்வெடாரின் Gonzalo Escobar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>end<<<<<